11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

32. மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் தொழிற்சாலை மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி - மேம்பாட்டு அமைப்பு, மத்திய அரசின் உள் விவகாரங்கள் அமைச்சகத்தின் காவல் துறை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆகியவை காவல் துறைத் தலைமை இயக்குநர் மூலம் பாதுகாப்பு தொடர்புடைய பொருட்களை வாங்குவதற்காக அவசரச் சட்டத்தை அறிவிக்கையிடுவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 28-05-2003 ஆம் நாளிட்ட 166 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மை குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

33. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மை குறித்த விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நிதிச் (சம்பளங்கள்) துறையின் 09-10-2003 ஆம் நாளிட்ட 412 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மை குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

34. 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர் தீர்வைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1963) அட்டவணை-II-ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும், இச்சட்டமானது 01-07-2003 முதல் பொருந்தும் என ஆணையிடுவது குறித்து வருவாய்த் துறையின் 30-06-2003 ஆம் நாளிட்ட 318 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1963) 16 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

35. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 2001-2002 ஆம் ஆண்டுக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] . (தமிழ், ஆங்கிலம்)

36. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை, ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

37. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ, பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கபபெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

38. தமிழ்நாடு அரசின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள், [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

39. தமிழ்நாடு அரசின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள், [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)

40. 29-08-2002 ஆம் நாளன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் மோதல் சம்பவங்கள் குறித்தும் அவற்றுக்கு வழிவகுத்த காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்தும் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட திரு. எஸ். நடராஜன் (ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி) விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

41. மதுரை மாவட்டம், மேலூர், அரசினர் கலைக் கல்லூரி அருகே 03-09-2002 ஆம் நாளன்று சில மாணவர்கள், பொது மக்கள் மற்றும் காவல் துறையினர் காயமுற்ற மோதல் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட திரு. கே. சுப்பிரமணியன் (ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி) விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)